www.tntextbooks.in

# அலகு – 2

# இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்



## கற்றலின் நோக்கங்கள்

- இந்தியக் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகளை விவரித்தல்
- இந்திய பருவகாலங்களின் பண்புகளை புரிந்துகொள்ளுதல்
- இந்தியாவின் மழைப்பரவலைத் தெரிந்துகொள்ளுதல்
- இந்தியாவின் பல்வேறு இயற்கைத் தாவரவகைகள் மற்றும் வன உயிரினங்கள் பற்றி கற்றறிதல்

9PLZDG

## அறிமுகம்

நாம் கோடைக்காலத்தில் அதிகமாக தண்ணீரைப் பருகுகிறோம் ஆனால் குளிர் காலத்தில் அதே அளவு தண்ணீரைப் பருகுவதில்லை. வட இந்தியாவில் கோடைக்காலத்தில் மென்மையான பருத்தியாலான ஆடைகளையும் குளிர்காலத்தில் கம்பளி ஆடைகளையும் அணிகிறோம். தென்னிந்திய மக்கள் குளிர்காலத்தில் கம்பளி ஆடைகளை அணியாதது ஏன்? ஏனெனில், வட மற்றும் தென்னிந்தியாவில் தட்பவெப்பநிலை மாறுபடுவதே இதற்கு காரணமாகும்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> சமச்சீர் காலநிலை என்பது 'பிரிட்டிஷ் காலநிலை' என்றும் அழைக்கப்படுகிறது.இக்காலநிலை அதிகவெப்பமுடையதாகவோ அல்லது மிகக்குளிருடையதாகவோ இருக்காது.

## 2.1 இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகள்

**அட்சங்கள் கடல் மட்டத்திலிருந்து உயரம், கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, பருவக்காற்று, நிலத்தோற்றம், ஜெட் காற்றுகள்** போன்றவை இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகளாகும்.

### அட்சங்கள்

இந்தியா $8^{\circ}4'$ வட அட்சம் முதல் $37^{\circ}6'$ வட அட்சம் வரை அமைந்துள்ளது. $23^{\circ}30'$ வட அட்சமான கடகரேகை நாட்டை இரு சமபாகங்களாக பிரிக்கிறது. கடகரேகைக்கு தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் அதிகவெப்பமும் மிக குளிரற்ற சூழலும் நிலவுகிறது. கடகரேகைக்கு வடக்கே உள்ள பகுதிகள் மித வெப்ப காலநிலையைக் கொண்டுள்ளது.

### உயரம்

புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5°C என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது. இதற்கு "வெப்ப குறைவு விகிதம்" என்று பெயர். எனவே சமவெளிப் பகுதிகளைக் காட்டிலும் மலைப்பகுதிகள் குளிராக இருக்கும். உதகை தென்னிந்தியாவின் இதர மலை வாழிடங்கள் மற்றும் இமயமலையில் அமைந்துள்ள முசௌரி, சிம்லா போன்ற பகுதிகள் சமவெளிகளைவிட மிகவும் குளிராக உள்ளது.

> கடல் மட்டத்திலிருந்து 6.7மீ உயரத்தில் அமைந்துள்ள சென்னையின் வெப்பநிலை 35°Cஆக இருக்கும்பொழுது 2240மீ உயரமுள்ள உதகை வெப்பநிலையைக் கண்டறிக.



10th_Geography_Unit_2_TM.indd 153 1/5/2022 3:50:20 PM